# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No.113/2023 தேதி- 03.02.2026

(P.W.1) - ஜெனிதா

குறுக்கு விசாரணை

1. வழக்கு சொத்தின் புதிய சர்வே எண் தெரியுமா என்றால் நினைவில்லை. வா.சா.ஆ 1 ஆவணத்தில் புதிய புல எண் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றால் இல்லை, பழைய சர்வே எண் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் பட்டிகை சொத்தைப்பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் சொத்து விவரம் என்று மட்டும் தான் உள்ளது என்றாலும் மற்ற எந்த விவரமும் இல்லை என்றால் அது வழக்கறிஞருக்கு தான் தெரியும். வா.சா.ஆ 2 ஆவணம் ஒரு முழுமையான ஆவணம் இல்லை என்பதால் வா.சா.ஆ.2 ஆவணத்தை வைத்து இந்த வழக்கில் முடிவு காண முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பழைய புல எண்ணிற்கு புதிய புல எண் சான்றிதழ் (Corelation Certificate) தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.355/1979 வழக்கில் பிரதிவாதிகளோ அவர்களுடைய முதாதையர்களோ அந்த வழக்கில் கட்சியாக இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்கில் எத்தனை சென்ட் எனக்கு உரிமைப்பட்டது என்றால் 20 சென்ட் சொத்தாகும். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் சொல்வதுபோல் எனக்கு உரிமைப்பட்ட சொத்து ஏதும் இல்லை என்றால் சரியல்ல.

2. எனக்கு உரிமைப்பட்ட 20 சென்ட் சொத்தின் 4 பக்க எல்கைகள் சொல்லமுடியுமா என்றால் அது தனித்தனி பகுதியாக உள்ளதால் எல்கைகளை குறிப்பிட்டு சொல்ல முடியாது. மேற்சொன்ன 20 சென்ட் சொத்தில் 1 பகுதிக்கு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன 20 சென்ட் சொத்தில் 1 பகுதி எவ்வளவு என்று சொல்லமுடியுமா என்றால் 2 சென்ட் சொத்து இருக்கலாம். மேற்சொன்ன 2 சென்ட் சொத்தை பிரதிவாதிகள் எடுத்து வைத்துள்ளார்கள் அதை மீட்டு தர கோரிதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கின் படி ஆதியில் 20 சென்ட் யாருக்கு உரிமைப்பட்டது என்றால் என் அப்பா விலைக்கு வாங்கிய சொத்தாகும். என் அப்பா விலைக்கு வாங்கிய ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன

20 சென்ட் சொத்தின் பட்டா மற்றும் கரதீர்வை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அசல் வழக்கு எண்.355/1979 வழக்கில் என் அப்பாவிற்கு இறுதி நிலை தீர்ப்பாணையின் படி என் அப்பாவிற்று 28 சென்ட் சொத்து கிடைத்தது. மேற்சொன்ன 28 சென்ட் சொத்தை ஒழிப்பித்து தரவேண்டும் என்றும் எந்த ஒரு மனுவும் தாக்கல் செய்து உத்தரவு பெறவில்லை என்றால் சரியல்ல. நிறைவேற்று மனு எண்.1/2020 என்ற மனு தாக்கல் செய்துள்ளேன்.

3. மேற்சொன்ன நிறைவேற்று மனு எண்.1/2020 ல் இவ்வழக்கின் பிரதிவாதிகளை கட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு அந்த சொத்தில் உரிமையில்லை என்பதால் அவர்களை கட்சியாக சேர்க்கவில்லை. கருங்கல் கிராமம் புதிய புல எண்.611/4-ல் 3 சென்ட், சர்வே எண்.612/1A2 -ல் 3.750 சென்ட், சர்வே எண். 616/1A1B2 -ல் 2.250 சென்ட் சேர்த்து மொத்தம் 9 சென்ட் சொத்து சந்திரகுமார் என்பவருக்கு 29.6.2010 தேதியிட்ட ஆவண எண்.1477/2010 படி உரிமைப்பட்டது என்றால் மேற்சொன்ன சர்வே எண்ணில் சொத்துகள் வாங்கியுள்ளார்கள் ஆனால் கைவசப்படி வேறு சர்வே எண்ணில் கைவசம் வைத்துள்ளார்கள். வேறு சர்வே எண்ணில் கைவசம் வைத்துள்ளார்கள் என்று நான் சொல்வது மேற்சொன்ன ஆவணத்தின் படி 9 சென்ட் சொத்தை வாங்கி விட்டு அதற்கு பதிலாக எங்களுக்கு உரிமைப்பட்ட சொத்தில் கைவசம் எடுத்து அனுபவித்து வருகிறார்கள். மேற்சொன்ன 9 சென்ட் சொத்தானது ஆதியில் மேரிதெரம்மாள் என்பவருக்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன சொத்து சம்மந்தமாக மேரிதெரம்மாள் அசல் வழக்கு எண்.411/1996 ல் இதே நீதிமன்றத்தில் என் அப்பா சத்தியதாஸ் மற்றும் சுவாமிதாஸ்க்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் வழக்கு நடைபெற்றது பற்றி தெரியும், அதில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று தெரியாது.

4. மேற்சொன்ன அசல் வழக்கு எண்.411/1996 என்ற வழக்கு மேரிதெரம்மாள்ளுக்கு சாதகமாக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றாலும் என் அப்பா தாக்கல் செய்த AS.No.129/2002 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விசாரணை நீதிமன்ற தீர்ப்பு உறுதிப்படுத்தப்பட்டது என்றாலும் என் அப்பா தாக்கல் செய்த SA.No.467/2005 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விசாரணை நீதிமன்ற தீர்ப்பு உறுதிப்படுத்தப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன தீர்ப்பாணைபடி தாக்கல் செய்யப்பட்ட நிறைவேற்று மனு எண்.32/2005 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்சொன்ன 9 சென்ட் சொத்து ஒழிப்பித்து எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்சொன்ன அனைத்து வழக்கிலும் என் அப்பா கட்சியாக இருந்ததால் அதில்

பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை என் அப்பாவையும், அதன் பின் அவகாசிகளையும் கட்டுப்படுத்தாது என்றால் அந்த வழக்கு சொத்தைப்பற்றி எந்த உரிமையும் கோரவில்லை என்றால் சரியல்ல.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).